பாடம் – 1

# திருமறை (THE BIBLE)

வேதாகமம் என்று அழைக்கப்படும் புத்தகம் எப்படிப்பட்டது? இது 40 வித்தியாசப்பட்ட ஆசிரியர் கள், சுமார் 1600 ஆண்டு கால இடைவெளியில் (கி.மு.1500 - கி.பி.100 வரை) எழுதின புத்தகங் களின் தொகுப்பாகும். இந்த ஆசிரியர்கள் மற்றவர் கள் கற்றுக் கொள்ளும்படி தங்கள் சுய ஞானத் தையோ, அறிவையோ வெளிப்படுத்தி இவற்றை எழுதவில்லை. அவர்கள் இவைகளை எழுதும் படியாக “தேவனால் ஏவப்பட்டு” எழுதினர்.


“தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷ ருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவ னுடைய பரிசுத்த மனிதர்கள், பரிசுத்த ஆவியி னாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்” (2பேதுரு 1:21)

மற்றொரு வசனம் நமக்கு இப்படிச் சொல்கிறது, “வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ள வனாகவும் இருக்கும்படியாக, அவை கள் உபதேசத்துக்கும், கடிந்துகொள் ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதி யைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது” (2தீமோ.3:16,17)

இந்த வாக்கியங்களை மனிதர்கள் எழுதி யிருந்தாலும், அந்த செய்தியின் பிறப்பிடம் தேவனே! மனிதகுலம் அறிந்திருக்க வேண்டிய சத்தியங்களை வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. வேதாகமத்தின் வசனங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதினால், நம் விருப்பத்திற்கேற்ப அவற்றையும், அவற்றின் அர்த்தத்தையும் மாற்றக் கூடாது என்று தேவன் எச்சரிப்புக் கொடுக்கின்றார். மோசே, இஸ்ரவேல் ஜனங்களுக்கு வாங்கிக் கொடுத்த தேவனுடைய கட்டளைகளின் ஒரு பகுதி இப்படியாகக் கூறுகின்றது.

“நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி நான் உங்களுக்கு கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றுங் கூட்டவும் வேண் டாம். அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்” (உபா. 4:2)

வேதாகமம் எதைக் கற்றுக் கொடுக்கின்றது என்பதை சரியாக அறிய வேண்டியது அவசியம். இல்லையெனில், நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து அவரை (திருப்தி) பிரியப்படுத்த முடியாமல் போகும். அவரை நேசித்து, அவருடைய கற்பனை களை கைக் கொள்ளுகிறவர்களையே அவர் பாராட்டுவோர்.



“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத் தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை” (மத். 7:21)

### எந்த தேவன்?

இன்றைய உலகில் அநேக கடவுள்கள் உள்ளன. “எந்தக்கடவுளைப் பற்றி பேசுகிறீர்கள்?” என்று நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள். சுமார் 2000 வருடங்களுக்கு முன் அத்தேனே பட்டணத்திற்கு பவுல் வந்தபோது, இதேப் போல ஒரு கேள்வியைச் சந்தித்தார். அந்தப் பட்டணம் விக்கிரக ஆராதனையால் நிறைந் திருந்தது. (அப். 17:16) அவர்களுக்கு பவுல் இயேசுவைப் பற்றி பிரசங்கித்தார். (நம்முடைய 2ம் பாடத்தின் மைய நபர் அவர்தான்) ஆனால் இந்தப் போதனை, அந்த மக்களுக்கு விநோதமாய் இருந்தபடியால், நன்றாக விளக்கும்படி பவுலை அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

“அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவில் நின்று; அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிற படியால், கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை.

எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளினால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை. (அப்.17:22-25)

வேதாகமத்துக் கடவுள் ஒரு சாதாரண பக்தி மானோ, அநேக கடவுள்களில் ஒருவரோ அல்ல. நீங்கள் பூமியிலும் வானத்திலும் பார்க்கிற அனைத்தையும் படைத்த சர்வலோகத்தின் தேவன்தான் அவர். வேதாகமத்தின் முதல் வசனமே இந்த உண்மையை வெளிப்படுத்து கின்றது. “ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்” (ஆதி. 1:1)

ஆதியாகமத்தின் இதே முதல் அதிகாரம், தேவன் பன்மையானவர் என்று வெளிப்படுத்து கிறது. இங்கே நாம் தேவஆவியைப் பற்றி மாத்திரம் அல்ல (ஆதி. 1:2) “நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக” (ஆதி. 1:26) என்றும் வாசிக்கிறோம். உண்மையில் தேவத்துவத்தை 3 பேர் பகிர்ந்து கொள்கின்றனர். பிதா, வார்த்தை, (புதிய ஏற்பாட்டில் இயேசு) மற்றும் பரிசுத்த ஆவியானவர். இவர்கள் மூவரும் ஒன்றாயிருக்கி றார்கள் (வெவ்வேறு நபர்கள்) “இஸ்ரவேலே, கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்” (உபா.6:4)

தேவன் ஒரு மனிதனைப் போன்றவர் அல்ல என்றும் பைபிள் சொல்கின்றது. நாம் சரீரத்தில் வெளிப்புறமாக மாம்சமும் இரத்தமும் உடைய வர்களாயிருக்கிறோம் (உள்ளே ஆவியுடையவர் கள்); ஆனால், “தேவன் ஆவியாயிருக்கிறார்” (யோவான் 4:24)

படைப்பு முதற்கொண்டு நாம் தேவனுடன் பல நிலைகளில் வேறுபட்டிருப்பதாக, இந்த சரீரத்தில் வாழும்போது அநேக நேரங்களில் புரிந்து கொள்ளுவதில்லை. ஆனால், அவர் வேதாகமத்தில் தன்னை வெளிப்படுத்தியிருப்பதின் மூலம் அவருடைய குணம் மற்றும் சித்தத்தை நாம் அறிந்து கொள்ள முடியும்.

### வேதாகமம் என்றால் என்ன?

வேதாகமம் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. பழைய ஏற்பாடு மற்றும் புதியஏற்பாடு வேதா கத்தின் இரண்டு பெரும் பிரிவுகளாகும். வேதாகமத்தில் 39 பழைய ஏற்பாடு நூல்களும், 27 புதிய ஏற்பாட்டு நூல்களும் ஆகிய, மொத்தம் 66 புத்தகங்கள் உள்ளன.

பழைய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் கி.மு.1500 - கி.மு.400க்குள் எழுதப்பட்டன. மேலும் அவை 4 பெரும் பிரிவுகளாக பிரிக்கப் பட்டுள்ளன. முதல் பகுதியானது மோசேயினால் எழுதப்பட்ட 5 பகுதிகளை உள்ளடக்கியது. அது சட்டம் என்று அழைக்கப்படுகின்றது. இப்பகுதியின் முதல் புத்தகமான ஆதியாகமம் இந்த உலகத்தின் படைப்பைப் பற்றிக் கூறுகின்றது. மேலும் அது மனிதனுடைய வாழ்வில் சுமார் 2000 ஆண்டு வரலாற்றையும், எட்டுபேர் தவிர, மற்ற உலகத்தார் அனைவரும் வெள்ளத்தால் அழிக்கப் பட்டதையும் சேர்த்து கூறுகின்றது.

வெள்ளத்திற்கு பின், மனிதன் மீண்டும் தேவனோடு போராடினான். ஆதலால் தேவன் ஒரு சிறப்பான நோக்கத்திற்காக ஆபிரகாம் என்னும் மனிதனைத் தெரிந்து கொண்டார். அவருடைய சந்ததி (இஸ்ரவேல் என்று அழைக்கப் பட்ட மக்கள்) தேவனுடைய சிறப்பான ஜனங்களாயினர். மோசேயின் மூலமாக தேவன் தன்னுடைய பரிசுத்த கட்டளைகளை இந்த ஜனங்களுக்குக் கொடுத்தார். மேலும், அவர்கள் இயேசு இந்த உலகத்தில் பிறக்கப் போகும் தேசத்தாராய் இருக்கும் பாக்கியம் பெற்றனர்.

இந்த இயேசுதான், நம்முடைய பாவங்களுக்கான விலையைக் கொடுக்க வந்தவர். ஏனெனில் நாம் எல்லாரும் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறும்படி அவர் அப்படிச் செய்தார்.

ஆதியாகமப் புத்தகத்தின் இறுதிப் பகுதியில் தேவனுடைய ஜனங்களான இஸ்ரவேலர்கள், எகிப்தில் இருப்பதாகக் காண்கிறோம். யாத்திராகம புத்தகத்தில் இந்த இஸ்ரவேல் ஜனங்கள், அடிமை களாக்கப்பட்டதாக காண்கிறோம். தேவன், அவர்களை விடுவிக்கும்படி மோசேயை அனுப்புகிறார். பின்பு தேவன் அவர்களுக்கு தனது சட்டத்தையும், தன்னை ஆராதிக்க வேண்டிய வழியையும் கொடுக்கிறார். (லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம்)

அதைத் தொடரும் பழைய ஏற்பாட்டின் 12 புத்தகங்களும் (யோசுவா முதல் எஸ்தர் வரை) இஸ்ரவேலரின் அடுத்த 1000 ஆண்டு வரலாற்றை கூறுகின்றது. யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் உன்னதப் பாட்டு ஆகியவை “ஞான இலக்கியங்கள்” என்று அழைக்கப் படுகின்றது. இவை பாடல்கள், நாடகங்கள் மற்றும் நீதிமொழிகளை உள்ளடக்கிய கவிதை வடிவிலான புத்தகங்கள். கடைசி 17 புத்தகங்களும் இந்த 1000 ஆண்டுகளும் வாழ்ந்து, போதித்த தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவை.

புதிய ஏற்பாடு, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க வந்த இயேசுவின் மேல் கவனம் செலுத்துகிறது. மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய புத்தகங்கள் இயேசுவின் பூமிக்குரிய வாழ்வைப் பற்றி கூறுகின்றன.

இந்த 4 புத்தகங்களும் இயேசுவினுடைய கன்னிப் பிறப்பு, அவருடைய போதனைகள், நம்முடைய பாவங்களுக்காக அவர் சிலுவையில் மரித்து, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டது மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது ஆகியவற்றைக் கூறுகின்றது.

இயேசு, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்டுக் கொண்டார் என்று மனிதனுக்கு போதிக்கப்பட்ட நற்செய்தியுடன் அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகம் ஆரம்பிக்கிறது. பாவ மன்னிப்புக் கிடைக்கின்றது. இதற்கு மேல் தேவன் இரட்சிக்கப்படுகிற ஒவ்வொருவரையும் இயேசுவைத் தலையாகக் கொண்ட விசுவாசி களை சரீரமாகக் கொண்ட திருச்சபையில் வைக்கின்றார். ரோமர் முதல் யூதா வரை, நாம் எவ்வாறு தேவனை சேவித்து அவரை ஆராதிக்க வேண்டும் என்பதைக் குறித்த கிறிஸ்தவ வாழ்க்கையை கூறுகின்றன.

வெளிப்படுத்தின விசேஷம் ஒரு தீர்க்கதரிசன புத்தகம்; இந்த வாழ்வில் நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளின் மத்தியிலும், தேவன் அவருடைய விசுவாசமுள்ள பிள்ளைகளுக்காக அக்கறை கொண்டு அவர்களுக்கு உரிய பரிசு கொடுக்கிறார் என்று இப்புத்தகம் கூறுகிறது.

புதிய ஏற்பாடு புத்தகங்கள் அனைத்தும் கி.பி.40 - கி.பி.100ல் எழுதப்பட்டன.